உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 02.05.2026 • மலர் 04 • இதழ்: 122 • Edition : Nagercoil • 02.05.2026 • Vol : 04 • Issue : 122 • Page : 4 • Rs. 5/-

## சித்திரை திருவிழா கோலாகலம்..

# பச்சைப்பட்டில் ஆற்றில் இறங்கிய அழகர்

## குவிந்த பல லட்சம் பக்தர்கள்.. குலுங்கியது மதுரை

மதுரை, மே 2

மதுரை மாநகரில் நடைபெறும் சித்திரை திருவிழா வரலாற்று சிறப்பு பெற்றதாகும். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலையும், மதுரை அருகே உள்ள அழகர்கோவிலையும் இணைத்து இந்த விழா நடக்கிறது. சைவமும், வைணவமும் ஒருங்கிணைந்த பெருவிழாவாக இந்த திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த சிறப்புமிக்க திருவிழா கடந்த மாதம் 19ந்தேதி மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. அழகர் கோவில் சார்பில் தல்லாகுளம் பெருமாள் கோவிலில் கடந்த 17ந் தேதி முகூர்த்தக்கால் நடுதலுடன் ஆரம்பமானது. கடந்த 28ந் தேதி மீனாட்சி அம்மன் சுந்தரேசுவரர் திருக்கல்யாணமும், நேற்று முன்தினம் முன்தினம் தேரோட்டமும் கோலாகலமாக நடைபெற்றன.

இதற்கிடையே அழகர் மலையில் இருந்து சுந்தரராஜப்பெருமாள், கள்ளழகராக வேடம் பூண்டு தங்கப்பல்லக்கில் நேற்று முன்தினம் முன்தினம் மாலையில் மதுரைக்கு புறப்பட்டார். கண்டாங்கி பட்டு உடுத்தி, கையில் கைத்தடி, நேரிக் கம்பு ஏந்தி வந்த கள்ளழகரை வழிநெடுக பக்தர்கள் திரண்டு தரிசித்தனர். பொய்கைக்கரைப்பட்டி, கள்ளந்திரி, அப்பன்திருப்பதி, கடச்சனேந்தல் வழியாக நேற்று முன்தினம் காலை 6 மணி அளவில் மதுரையை அடுத்த மூன்றுமாவடிக்கு வந்து சேர்ந்தார்.

அங்கு கள்ளழகரை வரவேற்கும் எதிர்சேவை நடந்தது. அழகர்வேடம் அணிந்த பக்தர்கள், தோல் பைகளில் இருந்த தண்ணீரை பீய்ச்சி அடித்து, அழகரை வர்ணித்து பாட்டுப்பாடி அதிர்வேட்டுகள்முழங்கஎதிர்கொண்டு வரவேற்றனர். பின்னர் அங்கிருந்து புதூர், டி.ஆர்.ஓ. காலனி, ரிசர்வ் லைன், ரேஸ் கோர்ஸ், அவுட்போஸ்ட், வழியாக வழிநெடுகிலும் அமைக்கப்பட்டு இருந்த மண்டகப்படிகளில் கள்ளழகர் எழுந்தருளினார். வீதி எங்கும் பக்தர்கள் குவிந்து தரிசித்தனர்.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் தல்லாகுளம் பிரசன்ன வெங்கடாசலபதி கோவிலுக்கு வந்தார். அங்கே திருமஞ்சனம், சிறப்பு பூஜைகள் நடந்தன. நள்ளிரவில் தங்கக்குதிரை வாகனத்தில் எழுந்தருளினார். ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்து ஆண்டாள் சூடிக்கொடுத்த மலர் மாலையை அணிந்து பக்தர்களுக்கு காட்சி அளித்தார்.

தொடர்ந்து தல்லாகுளம் கருப்பணசாமி கோவிலுக்கு வந்து, தங்கக்குதிரையில் அமர்ந்தபடி ஆயிரம் பொன்சப்பரத்தில் காட்சி தந்தார். அதன் பின் வைகை ஆற்றில் எழுந்தருள புறப்பட்டார்.

இன்று காலை 5.35 மணிக்கு மேல் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கினார். இதையொட்டி வண்டியூர் வீரராகவப்பெருமாள் முன் கூட்டியே வெள்ளிக் குதிரையில் அங்கு வந்திருந்து கள்ளழகரை வரவேற்றார். இதனைத்தொடர்ந்து காலை 7.25 மணி வரை கள்ளழகர் வைகை ஆற்றில் பக்தர்களுக்கு காட்சி அருளினார். இதை காண மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர், ராமநாதபுரம். தேனி மாவட்டங்கள் உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளிநாடுகள், வெளிமாநிலங்களில் இருந்தும் பல லட்சம் பக்தர்கள் மதுரை மாநகரில் குவிந்திருந்தனர்.

இதனால் மதுரை விழாக்கோலத்துடன் குதூகலித்தது. கள்ளழகர் வேடம் அணிந்த பக்தர்கள் நேற்று முன்தினம் இரவு முழுவதும் விடிய, விடிய அழகரை வர்ணனை செய்து ஆடிப்பாடி மகிழ்ந்தனர். தீப்பந்தம் ஏந்தியும், தோலினால் செய்த பைகளில் தண்ணீரை நிரப்பி பக்தர்கள் மீது பீய்ச்சி அடித்தும் நேர்த்திக்கடன் செலுத்தினார்கள்.

கள்ளழகர் ஆற்றில் இறங்கியபோது பக்தர்கள் செம்புகளில் சர்க்கரையை நிரப்பி சூடம் ஏற்றி சாமி தரிசனம் செய்தனர். ஏராளமான பக்தர்கள் தங்கள் வேண்டுதலை நிறைவேற்ற முடிக்காணிக்கை செலுத்தினார்.

இந்நிலையில் பகல் 12 மணிக்கு கள்ளழகர் ராமராயர் மண்டபம் சென்றார். அங்கு பக்தர்கள் அங்கப்பிரதட்சணம் செய்தனர். வேடம் அணிந்த பக்தர்கள் கள்ளழகர் மீது தண்ணீரை



பீய்ச்சி அடித்து குளிர்விக்கும் தீர்த்தவாரி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இன்று இரவு 9 மணிக்கு வண்டியூர் வீரராகவப் பெருமாள் கோவிலுக்குச் சென்று அங்கு எழுந்தருள்கிறார். அங்கு நாளை அதிகாலை ஏகாந்த சேவையும், மதியம் தேனூர் மண்டபத்தில் மண்டுக முனிவருக்குச் சாப விமோசனம் அளிக்கும் நிகழ்வும் நடைபெற உள்ளன.

விழாவின் மற்றொரு முக்கிய நிகழ்வான தசாவதாரக் காட்சி, நாளை நள்ளிரவு 12 மணி முதல் ராமராயர் மண்டபத்தில் விடிய விடிய நடைபெற உள்ளது. இதில் பெருமாளின் பத்து அவதாரங்களையும் பக்தர்கள் தரிசிக்கலாம். மறுநாள் காலை மோகினி அவதாரத்தில் வீதி உலா வரும் அழகர், மே 4ம் தேதி அதிகாலை பூப்பல்லக்கில் எழுந்தருளி, பின்னர் தல்லாகுளம் கருப்பணசாமி கோவிலில் விடைபெற்று மீண்டும் அழகர்மலைக்கு திரும்புவார்.

லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்துள்ளதால், மதுரைமாநகர்முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சுமார் 5,000க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர், மேலும் டிரோன்கள் மூலம் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர் தின விடுமுறை என்பதால் கூட்டம் அதிகமாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு, சிறப்புப் பேருந்துகள் மற்றும் குடிநீர், சுகாதார வசதிகளைத் தமிழக அரசு மற்றும் மாநகராட்சி நிர்வாகம் விரிவாக செய்துள்ளது.

கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கிய வைபவத்தையொட்டி மதுரை மாநகர் விழாக்கோலம் பூண்டுள்ள நிலையில், கொளுத்தும் வெயிலில் பக்தர்களின் தாகத்தை தீர்க்க பல இடங்களில் நீர் மோர் வழங்கப்படுகின்றன. மேலும் 300க்கும் மேற்பட்ட இடங்களில் பக்தர்கள் பசியாற உணவு வழங்கப்பட்டு வருகின்றன.

## கருத்துக்கணிப்பு: உண்மையான தீர்ப்பு வரும்வரை காத்திருப்போம்

### தமிழிசை சவுந்தரராஜன் பேச்சு



சென்னை, மே. 2

சென்னையில் பாஜக மூத்த தலைவர் தமிழிசை தமிழிசை சவுந்தரராஜன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

போர்ச்சூழல் காரணமாக வணிக சிலிண்டர் விலை உயர்வு என்பது தற்காலிக மாற்றம் மட்டுமே. உலக நாடுகள் எல்லாம் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தி கொண்டிருக்கும் வேளையில் இந்தியாவில் மட்டும் உயராமல் இருப்பது பிரதமர் மோடியின் நிர்வாக திறமையை காட்டுகிறது.

இந்தியாவில் பிரதமர் மோடியின் நிர்வாகத் திறமையால் பெட்ரோல், டீசல், வீட்டு சிலிண்டர் விலை உயரவில்லை. வர்த்தக சிலிண்டர் விலை உயர்வு தற்காலிகமான மாற்றம்; போரின் தாக்கம் எப்படி இருக்கும் என்பதை சிந்திக்க வேண்டும்.

கருத்துக்கணிப்புகள் பற்றி இப்போது கருத்து சொல்ல வேண்டாம். உண்மையான தீர்ப்பு வரும்வரை காத்திருப்போம் என்றார்.

## தேர்தல் குறித்த கருத்துக் கணிப்புகள் ஒரு 'புதிர்' வைகோ பேட்டி



சென்னை, மே 2

தமிழக சட்டமன்றத் தேர்தல் குறித்த கருத்துக் கணிப்புகள் ஒரு புதிர் என மதிமுகதலைவர்வைகோ கூறியுள்ளார். தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், வெவ்வேறு அமைப்புகள் வெவ்வேறு விதமான முடிவுகளை வெளியிட்டுள்ளன.

நான்கு அமைப்புகள் நடத்திய கணிப்புகளில் திமுக வெற்றி பெறும் என்று தெரிவித்துள்ள நிலையில், வேறு இரண்டு அமைப்புகள் அதிமுக தான் மீண்டும் ஆட்சியமைக்கும் எனக் கூறியுள்ளன.

குறிப்பாக, ஒரு குறிப்பிட்ட கருத்துக் கணிப்பு விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் (தவெக) பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைக்கும் என்று தெரிவித்துள்ளது.

தமிழகத் தேர்தல் முடிவுகள் குறித்து அனைவரும் ஆவலாக உள்ளனர்.

இந்தத் தேர்தல் முடிவுகளில் ஆச்சரியங்கள் இருக்கலாம் அல்லது இல்லாமலும் போகலாம். ஆகையால், இந்தப் புதிரைக் காத்திருந்து பார்ப்போம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## வணிக சிலிண்டர் ஒரே நாளில் ரூ. 993 உயர்வு செல்வப்பெருந்தகை கண்டனம்



சென்னை, மே. 2

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

நாட்டின் பொருளாதார நிலையை சீராக்குவதி லும், பொது மக்களின் அன்றாட வாழ்வாதாரத்தை பாதுகாப்பதிலும் மத்திய அரசு விலை அதிகரிப்பு, வேலைவாய்ப்புகுறைவு போன்ற அடிப்படை பிரச்சினைகளில் சரியான தீர்வுகளை வழங்காமல், நடுத்தர மற்றும் சாமான்ய மக்களின் சுமையை மேலும் அதிகரிக்கும் முடிவுகள் எடுக்கின்றது.

இன்று வணிக எரிவாயு சிலிண்டர் மற்றும் 5 கிலோ சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் ஒரே நாளில் ரூ 993 மற்றும் ரூ 261 உயர்த்தியிருப்பதற்கு கடுமையான கண்டனங்களை தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் தன்னிச்சையாக எண்ணெய் நிறுவனங்கள் இந்த முடிவை எடுத்திருக்க முடியாது. இதன் விளைவாக, சிறு மற்றும் நடுத்தர வணிகர்கள், உணவகங்கள், தெரு வியாபாரிகள் ஆகியோருக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் தாக்கம் பொதுமக்களின் உணவுப் பொருட்களின் விலையிலும் நேரடியாக பிரதிபலிக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

எனவே, மத்திய அரசு உடனடியாக தனது தவறான கொள்கைகளை மறுபரிசீலனை செய்து, விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பொதுமக்களின் நலனை முன்னிலைப்படுத்தி செயல்பட வேண்டியது அவசியம் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## இன்னும் 2 நாள்தான் இருக்கு..

# மே 4ம் தேதி வெற்றிச் செய்தி வரும்:பிரேமலதா விஜயகாந்த் பேட்டி




சென்னை, மே 2

உலக உழைப்பாளர்களின் திருநாளாம் மே தினத்தை ஒட்டி, சென்னையில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா, கேப்டன் விஜயகாந்த் சிலைக்கு மாலை அணி மரியாதை செய்தார். பிறகு செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

கருத்துக்கணிப்பை நான் எப்படி பார்க்கிறேன் என்றால் ஆக்கப்பொறுத்தவர்கள் ஆறப்பொறுங்கள். எல்லாம் முடிந்து இருக்கிறது. இன்னும் 2 நாள்தான் இருக்கு.. மே 4ம் தேதி வெற்றிச் செய்தி வரும். எல்லோருக்கும் நல்லதே நடக்கும்.

எங்கள் மதச்சார்பற்ற வெற்றிக் கூட்டணி அமோக வெற்றி பெறும்; அண்ணன் ஸ்டாலின் மீண்டும் முதல்அமைச்சராக வருவார் நாங்கள்(தேமுதிக) 10 பேர் போட்டியிட்டுள்ளோம். கேப்டன் ஆசீர்வாதத்துடன் 10 பேரும் சட்டசபைக்கு செல்வோம்.

எல்லோரும் வாழ்த்தினாலும் தேமுதிக தான், திட்டினாலும் தேமுதிக தான். பழுத்தமரம் தான் கல்லடி படும் என்ற விமர்சனங்களுக்கு மே 4ம் தேதி பதில் கொடுக்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில்

# வாக்கு எண்ணும் பணி குறித்து கலெக்டர் ஆலோசனைக்கூட்டம்

## வேட்பாளர்கள், முகவர்கள், அதிகாரிகள் பங்கேற்பு



தஞ்சாவூர் மே 2

தஞ்சாவூர் மாவட்டத்தில் வாக்கு எண்ணும் பணிகள்குறித்து மாவட்ட கலெக்டர்பிரியங்காபங்கஜம் அதிகாரிகள் மற்றும் வேட்பாளர்கள், வேட்பாளர்களின் முகவர்களுடன் ஆலோசனை நடத்தினார்

2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தலுக்கான வாக்குப்பதிவு தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்ட மன்ற தொகுதி களுக்கு உட்பட்ட அனைத்து வாக்குச்சாவடிகளும் கடந்த 23ஆம் தேதி நடைபெற்றது

இந்த நிலையில் வாக்கு எண்ணும் பணி வருகிற 4ஆம் தேதி திங்கட்கிழமை நடைபெறு கிறது. வாக்கு எண்ணும் பணி குறித்தும், அது தொடர்பாக மாவட்ட நிர்வாகத்தினால் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்தும் தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது

இந்த கூட்டத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்ட சபை தொகுதிகளிலும் போட்டியிடும் வேட்பாளர்கள், அல்லது அவர்களின் அங்கீகரிக்கப் பட்ட முகவர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர்பிரியங்காபங்கஜம் தலைமையில் நடந்த இந்த ஆலோசனை கூட்டத் தில் மாவட்ட வருவாய் அதிகாரிகள் தியாகராஜன்,

வேலுமணி (நிலஎடுப்பு), அனைத்து தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தொடர்புடைய அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

### மூலப்பொருட்கள் விலை உயர்வு:

# உள்நாட்டு ஆடை உற்பத்தி 40 சதவீதம் குறைவு



திருப்பூர், மே. 2

திருப்பூரில் வெளிநாட்டு ஆடை வர்த்தகத்துக்கு இணையாகஉள்நாட்டுஆடைவர்த்தகம்முக்கியத்துவம் வாய்ந்தது. இங்கிருந்து கேரளம், கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, மராட்டியம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு ஆடைகள் அதிகம் அனுப்பி வைக்கப்படுகிறது. திருப்பூரில் உள்நாட்டு ஆடை தயாரிப்பில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பனியன் நிறுவனங்கள் உள்ளன.

கோடை காலத்துக்கான ஆடை தயாரிப்பு ஆர்டர்கள் பெறப்பட்டு ஆடைகள் அனுப்பி வைத்துள்ளனர். கோடை விடுமுறைக்கு பிறகு பள்ளிகள் திறப்பை முன்னிட்டு மாணவிகளுக்கான உள்ளாடைகள், சிம்மிஸ், சார்ட்ஸ், மாணவர்களுக்கான உள்ளாடைகள் தயாரிப்பு ஆர்டர்கள் வரத்தொடங்கியுள்ளன. ஆனால் தற்போது நூல் விலை உயர்வு காரணமாகவும், ஆட்கள் பற்றாக்குறை காரணமாகவும் ஆர்டர்களை எடுக்க தயங்கி வருகிறார்கள்.

கடந்த 3 மாதங்களில் நூல் விலை கிலோவுக்கு ரூ.24 வரை உயர்ந்துவிட்டது. வெளிநாடுகளில் போர் சூழல் காரணமாக மூலப்பொருட்கள் கிடைப்பதில் சிக்கல் நீடிக்கிறது. இதன் காரணமாக ஆடை தயாரிப்பு செலவு 20 சதவீதம் அதிகரித்துள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர்கள் சங்கம் (சைமா) சார்பில் ஆடைகளின் விலையை 7 சதவீதம் உயர்த்துவது என சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இந்த விலை ஏற்றம் கட்டுப்படியாகவில்லை என்றாலும், வேறு வழியின்றி ஆடை தயாரிப்பை தொடர்வதாக உள்நாட்டு ஆடை உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து சைமா சங்க துணைத்தலைவர் பாலசந்தர் கூறும் போது, 'மூலப்பொருட்கள் விலை உயர்ந்து விட்டதால் ஆடை களின் உற்பத்தி விலை 20 சதவீதம் அதிகரித்துள்ளது. தேர்தல் காரணமாக வெளிமாநில, வெளிமாவட்ட தொழிலாளர்கள் சொந்த ஊர் சென்றுள்ளனர். ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மூலப்பொருட்களின்விலைஉயர்வால்புதியஆர்டர்கள் எடுக்க தயக்கமாக உள்ளது. இதன்காரணமாக கடந்த 1 மாதமாக உள்நாட்டு ஆடை உற்பத்தி 40 சதவீதம் குறைந்துள்ளது. அதுபோல் கடந்த ஆண்டை ஒப்பிடும்போது இந்த ஆண்டு 25 சதவீதம் ஆர்டர்கள் வருகை குறைந்துள்ளது.' என்றார்.



தருமபுரி மாவட்டத்தில் NEET தேர்வு வரும் மே 3 ஞாயிற்றுக்கிழமை நேரடி தேர்வாக நடைப்பெற உள்ளதால் தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்று வரும் முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் சதீஷ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கவிதா உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தஞ்சாவூர்

# பெரிய கோவில் சித்திரை திருவிழா தீர்த்தவாரியுடன் நிறைவு



தஞ்சாவூர் மே 2

தஞ்சாவூர் பெரிய கோவிலில் நடைபெற்று வந்த சித்திரை பெருவிழா தீர்த்த வாரியுடன் நிறைவடைந்தது

தஞ்சாவூர் பெரிய கோவில் உலகப் பிரசித்தி பெற்ற கோவிலாகும். இந்த கோவில் தமிழர்களின் கட்டிடக்கலைக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்கி வருகிறது. இங்கு பெருவுடையார், பெரிய நாயகி அம்மன், வராகி அம்மன், விநாயகர்,முருகர், கருவூரார்,நடராஜர்,தட்சிணாமூர்த்தி உள்ளிட்ட சன்னதிகள் உள்ளன.

இந்த கோவிலில் நடைபெறும் விழாக்களுள் சித்திரை திருவிழா வும் ஒன்று, இந்த திருவிழா 18 நாட்கள் நடைபெறும், அதன்படி இந்த ஆண்டு சித்திரை திருவிழா விற்கு பந்தக்கால் முகூர்த்தம் கடந்த மார்ச் 6ம் தேதி நடைபெற்றது தொடர்ந்து ஏப்ரல் 13ஆம் தேதி கொடியேற்றத்துடன், விழா தொடங்கியது .விழா நாட்களில் தினமும் காலை மாலை சுவாமி புறப்பாடு நடைபெற்று பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்

விழாவில் முக்கிய நிகழ்வான அணை தேரோட்டம் கடந்த 27ஆம் தேதி நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர். விழாவின் நிறைவு நாளில் அஸ்திர தேவர் பல்லக்கில் கோவிலில் இருந்து புறப்பட்டு அருகில்உள்ளசிவகங்கை குளத்திற்குச் சென்றார்

அங்கு மஞ்சள், பால், தயிர் உள்ளி ட்ட பொருள்களால் அபிஷேகம் செய்யப்பட்ட தீர்த்தவாரி நடை பெற்றது.18 நாட்களாக நடைபெற்ற சித்திரை பெருவிழா, பக்தர்களின் பக்தியும் முழக்கத்துடன் நிறைவடைந்தது.




### திறனை வளர்த்துக் கொண்டால் மட்டுமே வெற்றி பெற முடியும்

# உலகளாவிய போட்டிகள் தான் மாணவர்களுக்கு பெரிய சவால்

## பெரியார் மணியம்மை பல்கலை க்கழக விழாவில் கவிஞர் வைரமுத்து பேச்சு

தஞ்சாவூர் மே 2

உலகளாவிய போட்டி தான் மாணவர்களுக்கு பெரிய சவால் எனவே அதனை எதிர்கொள்ளும் திறனை வளர்த்துக் கொண்டால் மட்டுமே வெற்றி பெற முடியும் என்று பெரியார் மணியம்மை பல்கலைக்கழக விழாவில் கவிஞர் வைரமுத்து கூறினார்

தஞ்சாவூரை அடுத்துள்ள வல்ல த்தில் உள்ளபெரியார்மணியம்மை பல்கலைக்கழகத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 136 வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது விழாவிற்கு, பல்கலைக்கழக வேந்தர் கி .வீரமணி தலைமை தாங்கினார். துணைத் தலைவர் அன்புராஜ் ,துணைவேந்தர் ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலைவைத்தனர்.மாணவி கியூபா அனைவரையும் வரவேற்றார்

விழாவில் திரைப்பட பாடல் ஆசிரியர் கவிஞர் வைரமுத்து கலந்து கொண்டு 'புரட்சி கவிஞரின் புதிய உலகம்' என்ற தலைப்பில் பேசினார். அப்போது அவர் பேசியதாவது:

ஒரு காலத்தில் கல்வி கற்ற வர்கள் ஒரு வர்கமாகவும், கல்வி கல்லாதவர்கள் மற்றொரு வர்க்கமாகும்பிரிக்கப்பட்டனர் .அந்த பேதத்தை ஒழிக்க தான் பெரியார் கல்விக்கும் ,பெண்கள் கல்விக்கும், சமத்துவத்திற்கும் போராடினார் அவரது சுயமரியாதை கனவில் நீட்சி தான் இன்றைய பல்கலைக்கழகம்

இது சாதாரண கல்விக் கூடம் அல்ல, உலக தரத்தில் அமைந்து ள்ள அறிவுக் கூடம் மாணவர்களாகி ய நீங்கள் உள்ளூர் போட்டியாளர் களுடன் மட்டுமல்ல ,உலக அளவி லான போட்டியாளர்களுடன் போட்டியிட வேண்டியவர்கள் தஞ்சாவூரில் படிக்கும் மாணவனு க்கு போட்டி வாஷிங்டனில் இருக்க லாம் இங்கு படிக்கும் மாணவிகளுக்கு போட்டி மாஸ்கோவில் இருக்கலாம்

நீங்கள் வெற்றி பெற்றால் பெரியார் போன்ற சமூக சீர்திருத்த வாதிகளின் கனவுகள் நனைவாகு ம் கல்வி என்பது உண்மையான கோவில். கோவில்கள் பல இருந்தாலும், உண்மையான முன்னேற்றத்தை அளிப்பது கல்விக்கூடங்களும், பல்கலைக் கழகங்களுமே நாட்டில் ஆயிரக் கணக்கான பல்கலைக்கழகங்க ளும், கோடிக்கணக்கான மாணவர்களும் இருந்தாலும் பட்டம் பெற்ற வர்களில் சுமார் 56 சதவீதம் பேருக்கு மட்டுமே வேலை கிடைக்கிறது. மீதமுள்ளவர்கள் சவால்களை எதிர்கொள்ள கொல்கிறார்கள்.

எனவே மாணவர்கள் தங்களை பல்திறமையுடன் உருவாக்கிக் கொள்ள வேண்டும். பட்டம் என்பது 'ஒரு விசிட்டிங் கார்டு' மாதிரி மட்டுமே அதற்கு மேலாக தொழிற் கல்வி, கூடுதல் திறன்கள் ஆகியவற்றை கற்றுக்கொள்ள வேண்டும் உலகின் எதிர் பார்ப்புக்கும் தகுந்த திறனை வளர்த்துக் கொள்ளுங்கள் வறுமை, குடும்ப சூழல் அல்ல, உலகளாவிய போட்டி தான், உங்களுக்கு பெரிய சவால் அதனை எதிர் கொள்ளும் திறனை வளர்த்துக் கொண்டால் மட்டுமே நீங்கள் வெற்றி பெற முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் பல்கலைக் கழகத்தின் நடைபெற்ற பல்வேறு கல்லூரி களுக்கு இடையேயான போட்டிக ளில் வெற்றி பெற்ற மாணவ மாணவி களுக்கு பரிசுகளை வைரமுத்து வழங்கினார். நிகழ்ச்சிகளை மாணவி யாழினி அனு ஆகியயோர் தொகுத்து வழங்கினர். விழாவில் பேராசிரியர்கள், மாணவ மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர் .


நிறைவில்பேராசிரியர் தங்கமணி நன்றி கூறினார்.



தருமபுரி மாவட்டம் & வட்டம் NS ரெட்டியூர் வத்தலமலை செல்லும் வழியில் உள்ள மலை உச்சியில் சுயம்புவாக எழுந்தருளியுள்ள அருள்மிகு மனோன்மணியம்மாள் உடனாகிய தகடூர் வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோவிலில் சித்ரா பௌர்ணமி பெருவிழாவை முன்னிட்டு சுவாமிக்கு சிறப்பு அபிஷேக பூஜைகள் மற்றும் அலங்கார பூஜைகள் நடைபெற்றது. காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை அன்னதானம் நடைபெற்றது.

### கேரளா சகோதரிகள் தற்கொலை

# மூத்த சகோதரிக்கு மின்னஞ்சல் அனுப்பி தற்கொலை செய்ததாக தகவல்





கன்னியாகுமரி மே 2

கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் கிடங்கூர் பகுதியை சேர்ந்தவர் பிலிப்பு என்பவர் மகள்கள் ஆனி பிலிப் (35), மீராபிலிப் (32). இவர்கள் இருவரும் அமெரிக்காவில் பணியாற்றி வந்தனர். சமீபத்தில் நாடு திரும்பிய இருவரும் கன்னியாகுமரிக்கு வந்தனர். இதை அடுத்து தங்கி இருந்த ஓட்டலில் இருந்து வெளியே சென்றவர்கள் பின்னர் இருவரும் ஹோட்டலுக்கு திரும்பவில்லை. இது குறித்த புகாரின் பேரில் கன்னியாகுமரி போலீசார் 2 இளம்பெண்கள் மாயமானது குறித்து விசாரணை நடத்தினர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் கன்னியாகுமரியில் உள்ள கடற்கரை பகுதியில் 2 பெண்களின் உடல் இறந்த நிலையில் கரையில் ஒதுங்கி கிடப்பதாக கடலோர குழும போலீசாருக்கு தகவல் கிடைத்து. போலீசார் பிணத்தை மீட்டு நடத்திய விசாரணையில் இறந்தது கேரளாவில்

இருந்து வந்த மாயமான சகோதரிகள் ஆனி பிலிப், மீரா பிலிப் என்பது தெரிய வந்தது. போலீசார் இரு உடல்களை மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் குறித்து கடலோர பாதுகாப்பு குழும போலீசார் வழக்கு பதிவு செய்து இறப்பு குறித்து விசாரணை நடத்தி வந்தனர்.

போலீசரின் முதற்கட்ட விசாரணையில் இருவரும் கடலில் குதித்து தற்கொலை செய்து கொண்டது தெரியவந்துள்ளது. இது ஒரு போலீசார் தரப்பில் கூறுகையில், அமெரிக்காவில் இருந்து புறப்படும் முன்பு ஆனி பிலிப், மீரா பிலிப் ஆகியோர் தங்களது மூத்த அக்கா எலிசபெத் பிலிப்புக்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பி உள்ளனர். அதில் நாங்கள் மன வருத்தத்துடன் ஊருக்கு புறப்படுகிறோம். இனி எங்களை தொடர்பு கொள்ள முயற்சிக்க வேண்டாம். நாங்கள் ரெண்டு பேரும் இறந்த பின்னர் கன்னியாகுமரிக்கு வந்து எங்களது இறுதி சடங்கை செய்துவிட்டு அஸ்தியை கன்னியாகுமரி கடலில் கரைக்க வேண்டும் என்றும், எங்களுக்காக இதை வேண்டுமென உருக்கமாக மின்னஞ்சலில் தெரிவித்துள்ளனர். பிரேத பரிசோதனை பின் இருவரின் உடல்கள் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட உள்ளது. மேலும் மகள்களிலும் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் கன்னியாகுமரியில் இறுதிச் சடங்கு செய்து அஸ்தியை கடலில் கரைக்க பெற்றோர் மற்றும் உறவினர்கள் முடிவு செய்துள்ளனர்.



தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து கோவில்களிலும் சித்ரா பௌர்ணமியையொட்டி சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. கொளத்தூர் பச்சையம்மன் மற்றும் செக்கோடி மோட்டு பட்டி பச்சையம்மன் கோவில்களில் சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள் நடைபெற்றது. சிறப்பு அலங்காரத்தில் அம்மன் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். நீண்ட வரிசையில் காத்திருந்து பக்தர்கள் அம்மனை வழிபட்டனர். திருக்கோவில் சார்பில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

### தொட்டியம்:

# லாரி மோதிய விபத்தில் பைக்கில் சென்ற வாலிபர் சாவு



திருச்சி, மே. 2

தொட்டியம் அருகே மாராட்சி பட்டியைச் சேர்ந்த ராம்குமார் என்பவர் கார்த்திகைப்பட்டி பகுதியில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது, எதிரே வந்த லாரி மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். தொட்டியம்

போலீசார் அவரது உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்து, விபத்து குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஸ்ரீரங்கம்: பெட்ரோல் குண்டு வீசிய 2 பேர் கைது

திருச்சி, மே. 2

திருச்சி ஸ்ரீரங்கம் ஜே ஜே நகரில் குணசேகரன் வீட்டருகே மணிகண்டன் பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது அதிக சத்தம் எழுப்பியதால், குணசேகரன் தட்டி கேட்டார். இதனால் ஆத்திரமடைந்த மணிகண்டன் மற்றும் பாலப்பிரியன் ஆகியோர் குணசேகரன்வீட்டில் பெட்ரோல் குண்டு வீசியதாக கூறப்படுகிறது.

இது குறித்து அளிக்கப்பட்ட புகாரின் பேரில் ஸ்ரீரங்கம் போலீசார் இருவரையும் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



## துவரங்குறிச்சி

# பேருந்து மோதி அரசுப் பேருந்து ஓட்டுநர் பலி

பழனி, மே. 2

திண்டுக்கல் மாவட்டம் குரும்பபட்டியைச் சேர்ந்த பாண்டியன், துவரங்குறிச்சி அரசு போக்குவரத்து பணிமனையில்ஓட்டுநராகப்பணிபுரிந்து வந்தார்.நேற்று(ஏப்ரல்30)துவரங்குறிச்சி பேருந்து நிலையத்தில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, அரசு பேருந்து ஒன்று அவர் மீது மோதியது. இதில் பேருந்தின் பின்பக்க டயர் அவர் உடல் மீது ஏறியதில், தலை நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். துவரங்குறிச்சி போலீசார் அவரது உடலைமீட்டுபிரேதபரிசோதனைக்காக அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## லால்குடி

# நெல்மூட்டை ஏற்றிச் சென்ற லாரி கவிழ்ந்து விபத்து

திருச்சி, மே. 2

லால்குடி அருகே காட்டூர் பகுதியில் நெல் ஏற்றிச் சென்ற லாரி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

ரயில்வே மேம்பாலப் பணிகள் காரணமாக மாற்று வழியில் சென்றபோது, குறுகலானசாலை மற்றும் சாலையோர மணல் மேடுகள் இல்லாததால் விபத்து ஏற்பட்டதாகக்கூறப்படுகிறது.



இதனால், அப்பகுதி வாகன ஓட்டிகளும் பொதுமக்களும் சாலையை விரிவாக்கம் செய்யக் கோரிக்கை விடுத்துள்ளனர்.




தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 மின்னணுவாக்கு இயந்திரத்தில் பதிவான வாக்குகளை எண்ணும் பணியில் ஈடுபட உள்ள அலுவலர்கள் மற்றும் தபால் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட உள்ள அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி மாவட்ட ஆட்சியர் சதீஸ் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) பாலசுந்தரம், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் இராமஜெயம் தேர்தல் தனி வட்டாட்சியர் அன்பு மத்திய / மாநில அரசு அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள்,ஆகியோர் உடனிருந்தனர்.

## கோவை சமூக நீதி திறன் மேம்பாட்டு பயிற்சி மையத்தின் சார்பாக

# தொழிலாளர் தினம் அனுசரிப்பு மற்றும் மருத்துவ முகாம்



கோவை மே:2

கோவை உக்கடம் ஜி எம் நகர் பகுதியில் தொழிலாளர் தின முப்பெரும் விழா,கோவை எக்னாமிக் சேம்பர் ஜி எம் நகர் நற்பணி குழு இணைந்து நடத்தும் பெண்களுக்கான மருத்துவ முகாம் சமூக நீதி திறன் மேம்பாட்டு பயிற்சி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் ஜி முகமம்து ரபீக் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மருத்துவ முகாம்,மஞ்சப்பை உறுதிமொழி ஏற்பு,நெகிழி இல்லா ஜி எம் நகரை உருவாக்க திறன் மேம்பாட்டு பயிற்சி முடித்த பெண்களுக்கு சான்றிதழ் வழங்கி வீட்டில் இருந்து வருமானத்தை ஈட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி, வருமானத்தை ஈட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

சமூக நீதி அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஜி முகம்மது ரஃபிக்கூறியதாவது

மத்திய மாநில அரசுகள் தொழிலாளர் விரோத சட்டங்களையும் நலவாரிய தொழிலாளர்களுக்கு ஒரு கண்ணில் வெண்ணையும் மற்றொரு கண்ணில் சுண்ணாம்பும் வைப்பது போன்ற செயல்பாட்டை தவிர்க்க வேண்டும் என கோரிக்கை வைத்தார்.

தமிழ்நாட்டில்18வகையானஅமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள் இருக்கின்றது இதில் கட்டுமான அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு மட்டும் பாதுகாப்பு நிதி வருவாய் உள்ளதால் நலத்திட்ட உதவிகள் மற்றும் பண பலன்கள் விரைந்து கிடைக்கிறது இது ஒரு கண்ணில் வெண்ணையும் மற்றொரு கண்ணில் சுண்ணாம்பும் வைப்பது போல் உள்ளது.

மற்ற 17 வகையான நலவாரிய தொழிலாளர்களுக்கு பாதித் திட்டங்கள் கூட கிடைப்பதில்லை உதவித் தொகை மற்றும் பணப்பலன் கிடைப்பதில் தாமதம் ஆவதால் தொழிலாளர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

இதற்கு நிரந்தர தீர்வு காண 18 வகையான நல வாரியங்களுக்கும் நிரந்தர நிதி ஆதாரத்தை உருவாக்கி ஒரே வகையான நலத்திட்டங்கள் வழங்கிட வழிவகை ஏற்படுத்த வேண்டும்.தொழிலாளர்களின் வாழ்வாதாரம் முன்னேற தொழிலுக்கேற்ப தொழில் இயந்திரம் வழங்கினால் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும் மேலும் அவர்கள் தன்னம்பிக்கையுடன் வாழ வழிவகை கிடைக்கும்.

கோவையில் அண்மையில் நடைபெற்ற மண்டல மாநாட்டில் வைத்த கோரிக்கைகளில் பல கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுத்த தமிழ்நாடு அரசுக்கு நன்றி இது போல் மேலே குறிப்பிட்ட சில முக்கியமான கோரிக்கைகளையும் நிறைவேற்றிட 2026 மேதினத்தில் தொழிலாளர்கள் சார்பாக அரசை வலியுறுத்துகிறோம் என்று கூறினார்.

உடன் சமூகநீதி கூட்டமைப்பு தலைவர் வெங்கடேசன்,மாமன்ற உறுப்பினர் எஸ் டி பி ஐ கட்சி 84 வது வார்டு அலிமா ராஜா உசேன்,முஸ்தாக், கவுன்சிலர் மயிலை செந்தில்,லயன்ஸ் ஏ அருள் தாஸ்,குருஸ் மேரி,நூர்ஜஹான், ப மீ ல ா , அ ம் லு , ஜ ோ தி , பௌசியா,தௌலைத் நிசா, ஆகியோர் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம்சமஸ்தானம்தேவஸ்தானம்கடலாடிவட்டம்கோயில்மாரியூர்மஹாவைப திருத்தலம் அருள்தரும் ஸ்ரீ யவன நிறவல்லி அம்பாள் சமேத ஸ்ரீ பூவந்தியநாதர் திருக்கோவில் சித்ரா பௌர்ணமி திருக்கல்யாண பெருவிழா மற்றும் வலை வீசும் திருவிளையாடல் வலைவீசும் படலம் திருக்கல்யாண கோலத்தில் எருதின் அன்னதானம் மற்றும் பக்தர்கள் அலைகடல் என திரண்டு கலந்து கொண்டனர்



# காப்புக்காடு தொல்காப்பியர் சிலைக்கு கலெக்டர் மாலை அணிவித்து மரியாதை

நாகர்கோவில், மே.2

புதுக்கடை அருகே உள்ள காப்புக்காட்டில் பிறந்தவர் தொல்காப்பியர். இவருடைய இயற்பெயர் திரணதூமாக்கினியார். சமதக்கினி முனிவரின் புதல்வர் என்றும் சிலர் கூறுகின்றனர். இவர் தொல்காப்பியம் என்னும் தமிழ் இலக்கண நூலின் ஆசிரியர். தொல்காப்பியர் வாழ்ந்த காலம் துல்லியமாகத் தெரியவில்லை. ஆனால் பதஞ்சலி முனிவர் (கி.மு. 200) காலத்தினும் முற்பட்டவர் என கருதுகின்றனர். அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட தமிழ்வளர்ச்சித்துறை மற்றும் தொல்காப்பியர் அறக்கட்டளையின் சார்பில், தொல்காப்பியர் 2737 வது பிறந்த நாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது. மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர். அழகுமீனா ந காப்புக்காடு பகுதியில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து, மலர்தூவி, மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் போதுமணி, தொல்காப்பியர் அறக்கட்டளை தலைவர் மு.பாஸ்கரன், தொல்காப்பியர் அறக்கட்டளை நிர்வாகிகள் ஷோபா, புஷ்பலதா, ஜெ.சுபகலா, நா.ரெவிந்திரன், பி.கே. சிந்துகுமார், சுரேஷ், புலவர்.கு.இரவீந்திரன், ஷஞ்சய் ஷாலஜி, பேராசிரியர் சவீவ், அம்பை தமிழ் இலக்கிய பேரவை புலவர் நீ.ஐயப்பன், ஜோணி அமிர்த ஜோஸ், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.




## கோவையில் எச் எம் எஸ் தொழிலாளர் சங்கம் சார்பில்

# உழைப்பாளர் தினம் அனுசரிப்பு

கோவை மே:02

கோவை மாவட்டம் சிங்காநல்லூர் கோவை ஜில்லா பஞ்சாலை தொழிலாளர் சங்க அலுவலக வளாகத்தில் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மே தின கொடியேற்றி மே தின உரிமை மாநாடு சங்கத்தின் தலைவர் மாநில எச் எம் எஸ் அமைப்பின் செயல் தலைவருமான டி எஸ் ராஜாமணி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்த மாநாட்டில் 140 ஆண்டுகளுக்கு முன்னால் 8 மணி நேர வேலை மட்டுமே வேண்டும் என்கிற கோரிக்கைக்காக போராடி, செந்நீர் சிந்தி உயிர் நீத்த தியாகிகளின் நினைவில் அவர்களின் தியாகம் போற்றி தொழிலாளர் வர்க்க உரிமைகளை பாதுகாக்கவும் புதிய உரிமைகளை வென்றெடுக்கவும் இந்த மாநாட்டில் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். நிகழ்ச்சியில் முதன்மைச் செயலாளர் ஜி மனோகரன் வாழ்த்துரை வழங்கினார். சங்க நிர்வாகிகள் தேவராஜன், சண்முகம், மோகன்ராஜ், பழனிச்சாமி,

மோகன்ராஜ், தங்கவேலு, சண்முகம், நாகராஜ் சௌந்தர்ராஜன், ரமண குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## திருச்சி

# தவெக தேர்தல் அலுவலகத்திற்கு தீ

திருச்சி, மே 2

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதிக்குட்பட்ட பெட்டவாய்த்தலை பகுதியில் செயல்பட்டு வந்த தமிழக வெற்றி கழகத்தின் தேர்தல் பணிமனை அலுவலகத்தை மர்ம நபர்கள் இன்று அதிகாலைதீயிட்டுகொளுத்திமுற்றிலும் அழித்துள்ளனர். மேலும், அங்கு வைக்கப்பட்டிருந்த பதாகைகளையும் கிழித்துள்ளனர். இதுதொடர்பாகதமிழக வெற்றி கழக ஒன்றிய செயலாளர் தலைமையில் பெட்டவாய்த்தலை காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

குற்றவாளிகளை உடனடியாக கைது செய்துதண்டனைபெற்றுத்தரவேண்டும் என தவெகவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## குமரி அரசு மருத்துவ கல்லூரியில்

# ஊழியர் போல் நடித்து மூதாட்டியிடம் நகை பறித்து சென்ற வாலிபர்

நாகர்கோவில், மே.2

வெள்ளிச்சந்தை அருகே உள்ள உன்னங்குளம் பகுதியை சேர்ந்தவர் சிவலிங்கம் மனைவி கமலம் (70). இவர் நேற்று காலை கணவரின் ரத்த பரிசோதனை முடிவு வாங்கி செல்வதற்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வந்துள்ளார். அங்கு புற நோயாளிகள் பிரிவில் கமலம் நின்று கொண்டு இருந்தார். அப்போது அடையாளம் தெரியாத வாலிபர் வருவார் வந்து கமலத்திடம் பேச்சு கொடுத்துள்ளார். அப்போது கமலம் கணவருக்கு ரத்த பரிசோதனை செய்த அறிக்கை வாங்க வந்துள்ளதாக கூறியுள்ளார். அப்போது அந்த வாலிபர் தான் இங்கு அங்கு லேப் டெக்னீசியன் வேலை செய்து வருவதாகவும், மருத்துவமனைக்குள் செல்லும்போது நகை அணிந்து செல்லக்கூடாத எனவும், எனவே அதனை கழற்றி வைத்து கொள்ளுங்கள் என கூறியுள்ளார்.

இதை உண்மை என நம்பிய கமலம் தனது கழுத்தில் கடந்த இரண்டே முக்கால் பவுன் செயினை கழற்றி பின்னர் சேலையில் முடித்து வைக்க முயன்ற போது, நகையை வாங்கிய வாலிபர் அங்கிருந்து அதை எடுத்துக்கொண்டு தப்பி சென்று விட்டார். இதனால் அதிர்ச்சி அடைந்த கமலம் ஆசாரிபள்ளம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மருத்துவமனை வெளிநோயாளிகள் பிரிவில் கண்காணிப்பு கேமராக்கள் உள்ளன. அந்த கேமராக்கள் காட்சிகளை போலீசார் ஆய்வு செய்து விசாரித்து வருகிறார்கள்.

# பணிநிறைவு பாராட்டு விழா



கமுதி, மே 2

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி வட்டாட்சியராக வ.சேதுராமன் பணிபுரிந்து பொதுமக்களிடம் நற்பெயர் பெற்று பணியிட மாறுதலில் சென்று மீண்டும் கமுதி வட்டாச்சியராக(SSS) பணிபுரிந்து பணி ஓய்வு பெற்ற மக்கள்சேவகரும் தமிழ்நாடு வருவாய்த்துறை (MBC/ DNT) அலுவலர்கள் நலச்சங்கத்தின் மாநிலத் தலைவருமான வ.சேதுராமன் MMsc,.B.ed.,பணி நிறைவு மற்றும் பாராட்டு விழாவில் கமுதி வட்டாச்சியர் அலுவலகர்கள் சங்கம் சார்பில் வட்டாச்சியர் துணை வட்டாச்சியர் மற்றும் அரசுப்பணியாளர்கள் கலந்து கொண்டு பொன்னாடை போர்த்திபாராட்டுதெரிவித்தனர்இந்நிகழ்வில்ஆப்பநாடு மறவர் சங்கத்தின் உயர்மட்ட குழு உறுப்பினர், அகில இந்திய DNT நலச்சங்கத்தின் தமிழ்நாடு பொதுச்செயலாளர்,அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின்சார்பிலும்முக்குலத்தோர்முன்னேற்றசங்கத்தின் நிறுவனர்/தலைவர் ப.கீரந்தை மு.வீரப்பெருமாள் தலைமையில் நிர்வாகிகள் கலந்து கொண்டனர் ஸ்ரீ பகவதி அறக்கட்டளை சார்பில். வெள்ளைப்பாண்டியன் கலந்து கொண்டு மரியாதை செய்தனர்.

## குலசேகரம் அருகே

# திருமண விழாவில் சிறுவனிடம் நகை பறித்த வாலிபர் கைது

மார்த்தாண்டம், மே. 2

குலசேகரம், மணலிவிளை பகுதியில் உள்ள திருமண மண்டபம் ஒன்றில் நேற்று முன்தினம் திருமண விழா நடைபெற்றது. அந்த விழாவில் மணப்பெண்ணின் உறவினரான மார்த்தாண்ட பகுதியை சேர்ந்த சாரதா (54) என்பவர் தனது குடும்பத்துடன் கலந்து கொண்டார். திருமண முகூர்த்தம் முடிந்த பின்னர் விருது நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது சாரதாவின் 6 வயது பேரன் அழுது கொண்டு இருந்துள்ளான். ஏன் என்று கேட்டபோது கழுத்தில் கிடந்த 2 பவுன் தங்கச் செயினை வாலிபர் ஒருவர் பறித்து சென்றதாக கூறினான்.

இதைத் தொடர்ந்து விசாரித்த போது, அந்த பகுதியை சேர்ந்த ஜெரால்டு (34) என்பவர் நகை பறித்தது தெரிய வந்தது. உடனடியாக திருமணத்தில் கலந்து கொண்டவர்கள் சுற்றி வளைத்து ஜெரால்டை பிடித்தனர். ஆனால் அவர், தான் நகை பறிக்கவில்லை என்று சாதித்து வந்தார். ஆனால் சிறுவன் ஜெரால்டு செயினை பிடித்து இழுத்ததாக தெரிவித்துள்ளார்.

இதையடுத்து குலசேகரம் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. ஜெரால் டை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரித்த போது சிறுவனிடம் நகை பறித்ததை ஒப்புக்கொண்டார். இதையடுத்து ஜரால்டு வீட்டிற்கு சென்ற போலீசார் அங்கு மறைத்து வைத்திருந்த நகையை மீட்டனர். இது குறித்து சாரதா கொடுத்த புகாரின் பேரில் குலசேகரம் போலீசார் ஜெரால்டு மீது வழக்கு பதிவு செய்து கைது செய்தனர்.




நமது அகில இந்திய மக்கள் நல கழகம் கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அலுவலகத்தில் மே 01.05. 2026 உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு சுமை தூக்குவோர்க்கு பொன்னாடை போர்த்தி நமது அமைப்பின் சார்பாக விருது வழங்கி மற்றும் ஏழை எளிய மக்கள் சுமார் ஐம்பது பேருக்கு இனிப்பு மற்றும் உணவு வழங்கி கௌரவிக்கப்பட்டது அனைவரும் நிகழ்ச்சியில் கலந்துக்கொண்டு விழா சிறப்பாக நடைப்பெற்றது இப்படிக்கு ஊத்தங்கரை கிளை உறுப்பினர்கள் சந்திரசேகர்,தவமனி,வித்யா, சதிஷ்.

தருமபுரி மாவட்ட சட்டசபை தேர்தலின் போது

# வாக்காளர்களுக்கு 8,560 மரக்கன்றுகள் விநியோகம்

## தேர்தல்பொது பார்வையாளர் தகவல்



தருமபுரி மே 2

தருமபுரி மாவட்டத்தில் பசுமை பரப்பை அதிகரிக்க சட்டசபை தேர்தலின் போது வாக்காளர்களுக்கு 8,560 மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன என்று தேர்தல் பொது பார்வையாளர் ஹீரா லால் கூறினார். தமிழக சட்டசபை தேர்தல் வாக்குப்பதிவு கடந்த 23 ம் தேதி நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கை வருகின்ற மே மாதம் 4 ம் தேதி நடைபெறஉள்ளது.மாவட்டதேர்தல்பொதுபார்வையாளர் ஹீராலால் தருமபுரியில் செய்தியாளர்களை சந்தித்து அவர் கூறியதாவது. தருமபுரி மாவட்டத்தில் 5 சட்டமன்ற தொகுதிகளில் பசுமை தேர்தலை நடத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அந்த வகையில் வாக்குப்பதிவின்போது பசுமை வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன. இதன்படி தொகுதி வாரியாக தருமபுரியில் 32, பாப்பிரெட்டிபட்டி 34, அரூரில் 6, பென்னாகரத்தில் 1, பாலக்கோட்டில் 3 என மொத்தம் 76 பசுமை வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன. மாவட்டத்தில் 960 வாக்குச் சாவடிகளில் 100 மீட்டர் சுற்றளவில் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாடு முழுமையாக தவிர்க்கப்பட்டது. மாவட்டத்தில் உள்ள ஐந்து தொகுதிகளில் முதல் முறை வாக்களித்த இளம் தலைமுறை வாக்காளர்கள் மற்றும் பெண்களுக்கு 8,560 மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இதே போல் 2,930 விதை பந்துகள், 5,375 விதை பென்சில்கள் மற்றும் விதை பேனாக்கள்வாக்குப்பதிவுகளின்போதுவாக்காளர்களுக்கு வழங்கப்பட்டன. பிளாஸ்டிக் பொருட்களுக்கு பதிலாக சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத பொருட்களை பயன்படுத்த அனைத்து பகுதிகளிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. இதே போல் பசுமை வாக்குப்பதிவு தொடர்பாக பல்வேறு செயல்பாடுகள் மூலம் பொது மக்களுக்கு இடையே விழிப்பு ஏற்படுத்தப்பட்டது. தண்ணீர், தாவரங்கள், நிலம் ஆகிய அடிப்படை வாழ்வாதார காரணிகளுக்கு பிளாஸ்டிக் பொருட்கள் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றன. எனவே பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டை தவிர்க்க பொதுமக்களுக்கு உரிய விழிப்புணர்வு ஏற்படுத்த இருக்கிறோம். மாவட்டத்தில் பசுமை தேர்தலில் நடத்த எதிர்பார்ப்பதை விட நல்ல ஒத்துழைப்பு கிடைத்துள்ளது .தேர்ல் வாக்குப்பதிவின்போது வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட மரக்கன்றுகள், விதை பந்துகள், விதை பேனாக்கள் மற்றும் விதை பென்சில்கள் நிலங்களில் செடிகளாக வளரும் போது மாவட்டத்தில் பசுமை பரப்பு அதிகரிக்கும் இவ்வாறு அவர் கூறினார்.



திருவள்ளூர்மாவட்டம்,ஆவடியை அடுத்த ஆரிக்கபேடு கிராமத்தில், அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. பல வருடங்களாக குலதெய்வமாக பக்தர்கள் வழிபட்டு வரும் ஸ்ரீ முனீஸ்வரருக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்விழாவினை சிறப்பான முறையில் ஜி.சண்முகம் மற்றும் ஆலய நிர்வாகிகள், விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர். ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். வருகை தந்த அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# புணராவர்த்தன ஜீர்னோதாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா



திருவள்ளூர், மே. 2

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி அடுத்த பழைய பம்மதுகுளம்மதுராஎல்லையம்மன்பேட்டைகிராமத்தில் எழுந்தருளி, அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ செல்வசித்தி விநாயகர் மற்றும் அருள்மிகு ஸ்ரீ லக்ஷ்மி நாராயண பெருமாள் திருக்கோயில்களில் புணராவர்த்தன ஜீர்னோதாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு விமர்சியாக நடைபெற்றது. வளர்பிறை சப்தமி திதி புனர்பூசம் நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதனத்தில், ஆகம முறைப்படி சிவாச்சாரியார்களால் வேதமந்திரங்கள் முழங்க புனித நீர் கலசத்தில் பூஜிக்கப்பட்டு மேளங்கள் முழங்க சிவாச்சாரியார்களால் கொண்டு செல்லப்பட்டு விமான கோபுரத்தின் மேல் புனித நீரை ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்பு அலங்காரம் தீபாராதனை நடைபெற்றது. ஏராளமான பொதுமக்கள் கிராமவாசிகள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். வருகை தந்த அனைவருக்கும் அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது. ஆலயத் தலைவர் பி. ஹரிகிருஷ்ணன் மற்றும் ஆலய விழா குழுவினர், ஊர் பொதுமக்கள் சிறப்பாக கும்பாபிஷனை நடத்தினர்.




# நந்தா பொறியியல் மற்றும் தொழில் நுட்ப கல்லூரிகளில் வேலைவாய்ப்பு தினம்

ஈரோடு மே 2

ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் சார்பில் வேலைவாயப்பு தினம் நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் சண்முகன் தலைமையில் நடைபெற்றது. அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி குத்துவிளக்கு ஏற்றி விழாவை தொடங்கி வைத்தார்.தொழில் அதிபர் தியாகுதாமலிங்கம்சிறப்புவிருந்தினராக கலந்து கொண்டார். நந்தா பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் ரகுபதி வரவேற்றார். விழாவில் நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர்கள் நந்தகுமார் பிரதீப், திருமூர்த்தி, மற்றும் நந்தா தொழில் நுட்ப வளாகத்தின் நிர்வாக அதிகாரி வேலுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர் . சிறப்பு விருந்தினர் எல் .டி. எம். நிறுவன வளாகத்தின் தலைவர் தியாகு தாமலிங்கம் 1735 மாணவர்களுக்கு பணிநியமன ஆணைக்கான உறுதி சான்றிதழ்களை வழங்கி பேசினார். முடிவில் நந்தா தொழில் நுட்ப கல்லூரியின் முதல்வர் முனைவர் நந்தகோபால் நன்றி கூறினார். விழாவினை எற்பாடு செய்திருந்த வேலை வாய்ப்பு துறை ஒருங்கிருங்கிணைப்பாளர்களும், விரிவுரையாளர்களுமான பிரபு, சிவராமகிருஷ்ணன், திருவேங்கடசாமி, நவீன் மற்றும் குழுவினர்களை கல்லூரி நிர்வாகத்தினர்கள் பாராட்டினார்கள்.

# அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை தென்காசி அப்ஹா (ABHA) அடையாள அட்டை

## பொதுமக்கள் பயன்பாட்டிற்கான முக்கிய அறிவிப்பு

தென்காசி, மே. 2

இந்திய அரசின் தேசிய சுகாதார ஆணையம் முன்னெடுத்து வரும் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன் திட்டத்தின் கீழ், அப்ஹா (ABHA – Ayushman Bharat Health Account) அடையாள அட்டை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அப்ஹா அட்டை என்பது ஒவ்வொரு நபருக்கும் வழங்கப்படும் 14 இலக்க தனிப்பட்ட சுகாதார அடையாள எண் ஆகும். இந்த அட்டையின் மூலம், ஒருவரின் மருத்துவ பதிவுகள் அனைத்தும் ஒரே இடத்தில் டிஜிட்டல் முறையில் பாதுகாப்பாக சேமிக்கப்படுகின்றன. இதன் மூலம் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவது எளிதாகிறது.

அப்ஹா அட்டையின் முக்கிய பயன்கள்:

அனைத்து மருத்துவ பதிவுகளையும் ஒரே கணக்கில் சேமிக்கும் வசதி மருத்துவமனைக்கு செல்லும் போது ஆவணங்கள் எடுத்து செல்ல வேண்டிய அவசியம் குறைவு மருத்துவர் உடனடியாக நோயாளியின் பழைய மருத்துவ வரலாற்றை அறிந்து சிகிச்சை அளிக்க முடியும் அவசர காலங்களில் விரைவான சிகிச்சை பெற உதவி

எப்படி பெறுவது?

பொதுமக்கள் தங்களின் ஆதார் அட்டை மற்றும் மொபைல் எண்ணைப் பயன்படுத்தி, அருகிலுள்ள அரசு மருத்துவமனைகளில் அப்ஹா அட்டையை இலவசமாக பதிவு செய்து பெறலாம். தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் அப் ஹா(ABHA) அடையாள எண் பெறுவதற்குவசதிசெய்யப்பட்டுள்ளது,அனைத்து பொதுமக்களும் தங்களின் அப்ஹா அடையாள எண்ணை உருவாக்கி வைத்துக் கொள்ளுமாறு மருத்துவத்துறை கேட்டுக் கொண்டுள்ளது. இது எதிர்காலத்தில் முழுமையான டிஜிட்டல் சுகாதார சேவைகளை பெற முக்கியமானதாக இருக்கும்.

தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு வரும், மருத்துவ பயனாளிகள் அனைவரும் தங்களுடைய ஆதார் எண்ணை கொண்டு வந்து, அதிக அளவில் இந்த திட்டத்தில் இணைந்து, தங்களின் சுகாதார சேவைகளை எளிதாக்கிக் கொள்ள வேண்டும் என மருத்துவமனை கண்காணிப்பாளர் தலைமை மருத்துவர் ஜெஸ்லின் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

ரெயின்போ மருத்துவமனை சிறுவனின்

# நெஞ்சகப் பகுதியில் 900 கிராம் புற்றுநோய் கட்டி அகற்றம்




சென்னை, மே2

10 வயது சிறுவனின் நெஞ்சகப் பகுதியில் உருவான 900 கிராம் புற்றுநோய் கட்டியை சென்னை ரெயின்போ குழந்தைகள் நல மருத்துவமனை மருத்துவர்கள் அறுவை சிகிச்சை மூலம் அகற்றி குணப்படுத்தினர்.

இதுகுறித்து மருத்துவமனையின் குழந்தைகள் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் நந்தினி கூறுகையில் :

சுவாசதொற்று,மூச்சுத்திணறல்,நெஞ்சு சளி ஆகிய பாதிப்புடன் 10 வயது சிறுவன் ரெயின்போ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பரிசோதனையில் அவரது நெஞ்சகப் பகுதியில் பெரிய கட்டி உருவாகி இருந்தது தெரிய வந்தது.

திசு பகுப்பாய்வில் அது " மெடியாஸ்டினல் ஜெர்ம் செல் " எனப்படும் புற்றுநோய் கட்டி என்பது தெரியவந்தது. எந்த அறிகுறியும் இல்லாமல் உருவாகும் இந்த வகை கட்டிகளை உரிய நேரத்தில் அகற்றாவிட்டால் உயிருக்கு ஆபத்தாகி விடும் . அச்சிறுவனுக்கு நெஞ்சகப் பகுதியில் 75% ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.

இதயம் மற்றும் முக்கிய நாளங்களை அழுத்திக் கொண்டிருந்த அக்கட்டியின் அளவை குறைக்க தொடர் கீமோ தெரிப்பி சிகிச்சை அளிக்கப்பட்டது . அதன் பின்னர் சிறந்த நிலை அறுவை சிகிச்சை மூலம் அந்த கட்டியை மருத்துவ குழுவினர் மொத்தமாக அகற்றினர். தற்போது அந்த சிறுவன் நலமாக வீடு நலம் பெற்று வீடு திரும்பி உள்ளார் என்று தெரிவித்தார்.

குழந்தைகள் அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரகவியல் நிபுணர் டாக்டர் தினேஷ் பாலாஜி கூறுகையில், "இந்த அறுவை சிகிச்சையில், மருத்துவக் குழுவினர் பொதுவாக இதய அறுவை சிகிச்சைகளுக்குப் பயன்படுத்தப்படும் 'ஸ்டெர்னோடமி' அதாவது நெஞ்சு எலும்பைத் திறக்கும் முறை மூலம் திறந்த மார்பக அறுவை சிகிச்சையைச் செய்தனர்.

சுமார் 900 கிராம் எடையுள்ள அந்தக் கட்டி வெற்றிகரமாக அகற்றப்பட்டது. அறுவை சிகிச்சைக்குப் பிறகு, சிறுவனுக்கு 24 மணி நேரத்திற்கு மட்டுமே வென்டிலேட்டர் உதவி தேவைப்பட்டது. அடுத்த நாளே அவன் வழக்கம் போல் சாப்பிடத் தொடங்கினான்,

நான்கு நாட்களுக்குள் மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டான். 6 முதல் 8 வாரங்களுக்குப் பிறகு எடுக்கப்பட்ட ஸ்கேனில், கட்டி முழுமையாக அகற்றப்பட்டது உறுதி செய்யப்பட்டது," என்றார்.

நெடுங்கல் அருகே என்.மோட்டூர் கிராமத்தில்

# 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஸ்ரீ மாரியம்மன் மற்றும் சுந்தர விநாயகர் கோவில் கும்பாபிஷேக விழா



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே உள்ள நெடுங்கல் அடுத்த என்.மோட்டூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் மற்றும் சுந்தர விநாயகர் ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா இன்று நடைபெற்றது. முன்னதாக வேள்வி குண்டத்தில் பூஜைக்கப்பட்ட புனித நீர் கலசங்களை ஆச்சாரியர்கள் தங்கள் தலையில் சுமந்தபடி மேளத்தாளங்களுடன் ஊர்வலம் சென்று கோபுரத்தில் உள்ள கலசங்களுக்கு வேத மந்திரங்கள் முழங்க கலசங்களுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் புனித நீரை பக்தர்கள் மீது தெளித்தனர்.

மூலவர் தெய்வங்களுக்கு மஹா அபிஷேகம் மற்றும் தீபாராதனை காட்டப்பட்டது. இதில் 2000 மேற்பட்ட பொதுமக்கள், பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர். தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது விழாவிற்கான ஏற்பாடுகளை ஊர் பொதுமக்கள் மற்றும் என்.மோட்டூர் கிராமத்தில் மிகவும் பழமை வாய்ந்த சுந்தர விநாயகர் கோவில் கும்பாபிஷேக விழா மோட்டூர் நித்தியானந்தம் பாஸ்கரன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது மற்றும் கிராம பொதுமக்கள் விழாக்குழுவினர் மிகச்சிறப்பாக செய்திருந்தனர்.

# சிட்டி யூனியன் வங்கியின் புதிய நிர்வாக இயக்குனர் மற்றும் சி.ஏ.ஓ வாக விஜய் ஆனந்த் பொறுப்பேற்பு



சென்னை, மே 2,

சிட்டி யூனியன் வங்கியின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி அதிகாரியாக விஜய் ஆனந்த் பொறுப்பேற்கிறார். கடந்த 15 ஆண்டுகளாக தலைமை பொறுப்பில் இருந்த காமகோடி சிட்டியூனியன் வங்கியின் அறக்கட்டளையின் தலைமை பொறுப்பை மே 1 2026 அன்று ஏற்கிறார்.

28 ஆண்டுகால வங்கித் துறை அனுபவம் கொண்ட விஜய்ஆனந்த், 2023ஆம் ஆண்டில் இவ்வங்கியின் செயல் தலைவராக இணைந்தார். பின்னர் 2024இல் செயல் இயக்குனராக பதவி உயர்வு பெற்றார். சிட்டியூனியன் வங்கியில் இணைவதற்கு முன்பு, இவர் ஆர்பிஎல் வங்கியில் சில்லறைச் சொத்துக்கள் பிரிவின் வணிகம் மற்றும் வசூல் பிரிவுத் தலைவராக பணியாற்றியுள்ளார்.

புதிதாக பொறுப்பேற்கவுள்ள விஜய் ஆனந்த் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது:

வங்கியில் கடைபிடிக்கப்பட்டுவரும் நடைமுறைகளில்மாற்றமின்றிதொடர்ந்து செயல்படும். குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் பிணையம் சார்ந்த கடன் வழங்கும் பிரிவுகளில் வங்கி தனது நிலையைத் தொடர்ந்து வலுப்படுத்தி வரும் அதே வேளையில், 'நம்பிக்கை', 'எளிமையான வங்கிச் சேவைகள்' மற்றும் 'சிறந்த வாடிக்கையாளர் சேவை' ஆகியவையே வங்கியின் முதன்மையான முன்னுரிமைகளாக தொடர்ந்து திகழும்," என்று அவர் தெரிவித்தார்

தேனி மாவட்டத்தில்

# மங்கலதேவி கண்ணகி அம்மன் கோயில் சித்திரை முழுநிலவு திருவிழா கோலாகலம்



தேனி, மே. 2

தேனி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், தமிழ்நாடு–கேரள மாநில எல்லையில் அமைந்துள்ள மங்கலதேவி கண்ணகி அம்மன் கோயிலில் சித்திரை முழுநிலவு திருவிழா (01.05.2026) வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்த திருவிழாவை முன்னிட்டு தமிழ்நாடு மற்றும் பல்வேறு மாநிலங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு அம்மனை தரிசித்து வழிபட்டனர். அதிகாலை நேரத்தில் மாவட்ட நிர்வாகம் சார்பில் பொங்கல் வைத்து வழிபாடு நடைபெற்றது. பசுமையை குறிக்கும் வகையில் கண்ணகி அம்மனுக்கு பச்சை பட்டாடை சாத்தப்பட்டு, வண்ண மலர்கள் மற்றும் சிறப்பு அலங்காரங்களுடன் அம்மன் அலங்கரிக்கப்பட்டு பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டில் பக்தர்களின் வசதிக்காக கூடுதல் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சிறப்பு பேருந்து சேவைகள் இயக்கப்பட்டதுடன், இரு மாவட்ட நிர்வாகங்களும் இணைந்து போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தினர். உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட பளியன்குடி வழியாக நடைபயணம் மேற்கொண்ட பக்தர்களுக்காக வழியெங்கும் மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு, குளுக்கோஸ், உப்புக்கரைசல் உள்ளிட்டவை வழங்கப்பட்டன. வெயிலின் தாக்கத்தை சமாளிக்க தேவையான மருத்துவ உதவிகளும் அளிக்கப்பட்டது. மேலும், பக்தர்களுக்கு தேவையான அளவில் சுத்தமான குடிநீர், கழிப்பிடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. வாகன நெரிசலை கட்டுப்படுத்த காவல்துறையினர் பல்வேறு இடங்களில் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். குமுளி பேருந்து நிலையத்தில் சிறப்பு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. திருவிழாவை முன்னிட்டு மாவட்ட நிர்வாகம் சார்பில் அன்னதானமும் வழங்கப்பட்டது. பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய ஏராளமான ஆண் மற்றும் பெண் காவலர்கள் பணியில் ஈடுபட்டனர். மேலும், இரு மாநில வனத்துறையினரும் இணைந்து வனவிலங்குகளால் எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படாத வகையில் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டனர்.இந்த விழா பக்தர்களின் உற்சாக பங்கேற்புடன்சிறப்பாக நிறைவடைந்தது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.